# கோவிட்-19 மற்றும் தீவிர தொற்றுப் பரவல் தயார்நிலையைப் பல் - இடர் ஆபத்து முன்னெச்சரிக்கை முறைமைகளின் கீழ்நிலையின் ஊடாக முன்னேற்றுதல்

**கோவிட்-19, இலங்கையின் சுகாதாரசேவை முறைமையை மட்டுமன்றி, சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளையும் வலுவாகப் பாதித்துள்ளது. ஆனாலும் எமக்குப் பல ஆச்சரியங்களை விட்டுச் சென்றுள்ளது:**

- நாம் அடுத்து வரும் தீவிரமான தொற்றுப் பரவலை எதிர்கொள்ளத் தயாரா?
- கோவிட்-19ஆல் ஏற்படும் குறுங்கால பாதிப்புக்களை மட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமான அளவு தயார்நிலையை எடுத்துக்காட்டுகின்றனவா?
- சனநெரிசல் கூடிய, அத்தியாவசிய வசதிகள் குறைந்த இடங்களில் வாழும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அகதிகளுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தூரநோக்குப் பார்வை எம்மிடம் உள்ளதா?
- கோவிட்-19 உடன் போராடும் இத்தருணத்தில் இன்னொரு இயற்கை இடர் ஏற்படுமாயின் அதை எதிர்கொள்ளும் தகைமை எமக்கு உள்ளதா? இயற்கை இடர் ஆபத்து முன்னெச்சரிக்கை சேவைகள் மற்றும் துலங்கல் செயற்பாடுகள் எவ்வாறு இந்தச் சந்தர்ப்பத்தில் பங்களிப்பு செலுத்தும்?





**இக்கேள்விகளுக்குத் தீர்வு காண்பதற்கு:**

- பல்-இடர் ஆபத்துக்களுடன் தொற்றுப் பரவலை ஒன்றிணைப்பது அவசியமாகும், அனர்த்த இடர் குறைப்புக்கான (DRR) தேசிய மற்றும் உள்நாட்டு மூலோபாயங்கள் என்பன செண்டாய் அனர்த்த இடர் குறைப்பு முறைமையில் (SFDRR) எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் அமுல்படுத்தப்படவில்லை.
- பல்தரப்பட்ட பங்குரிமையாளர்களையும் ஒன்றிணைக்கும் அணுகுமுறையானது தாக்கங்கள், நிதி ஒருங்கிணைப்பு, நாணயம், சமூக அளவீடுகள், நடைமுறைப் பகிர்வு மற்றும் பெற்றுக் கொண்ட பாடங்கள் என்பவற்றை ஒன்றாக இணைந்து பரீட்சிப்பதற்கு அவசியமாகும்.

**எனவே, பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நாம் இலக்குடன் வேலை செய்வோம்:**

1) கோவிட்-19 போன்று சர்வதேச ரீதியில் பாவும் நோய்களுக்கு எதிரான தயார்நிலையை அதிகரிக்க எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை இனங்காணல்.

2) தேசிய மற்றும் உள்நாட்டு இயற்கை அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கான மூலோபாயங்களுடன் கோவிட்-19 மற்றும் ஏனைய தொற்றுநோய் அபாயங்கள் தொடர்பான பாதுகாப்பு முறைகளை ஒன்றிணைக்க உரிய திட்டமொன்றை முன்வைத்தல்.

3) கோவிட்-19ற்கு எதிராகப் போராடுவதால், அதே நேரத்தில் ஏற்படக்கூடிய இயற்கை இடர்கள் தொடர்பான திட்டமிடல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராய்தல்.

4) கோவிட்-19 மற்றும் சுகாதார மேற்பார்வை முறைமைகளை, இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் ஒன்றிணைக்க உரிய திட்டமொன்றை முன்வைத்தல்.

5) சர்வதேச ரீதியில் பரவும் நோய்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வாறு அதிகளவிலான நோயாளிகளை வெளியேற்றல், சனநெரிசலுள்ள அகதிமுகாம்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகளைப் பாதிக்கும் என்பது தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகள் முன்வைத்தல்.

6) கோவிட்-19 மற்றும் சுகாதார மேற்பார்வை முறைமைகளை இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் ஒன்றிணைப்பதால், சமூக இணைப்புகள், தொடர்பாடல் வசதிகள் மற்றும் மக்களின் நடைமுறைகள் எவ்வாறு சர்வதேச ரீதியில் பரவும் நோய்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குக் கைகொடுக்கும் என்பது தொடர்பாக ஆராய்தல்.



## எமது அணுகுமுறை:

1) தற்போது சர்வதேச ரீதியில் பரவும் நோய்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கையாளும் முறைகள், அதற்கு பிரதானமாகப் பங்களிப்பு செலுத்தும் விடயங்களை ஒன்றுதிரட்டல்.
2) சர்வதேச ரீதியில் பரவும் நோய்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் எந்தளவுக்குத் தற்போதுள்ள தேசிய ரீதியிலான இயற்கை அனர்த்த ஆபத்துகளைக் குறைக்கும் முறைமைகளில் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளன என்பது பற்றி ஆராய்தல்.
3) குழுக் கலந்துரையாடல்
4) சிறப்புத்தேர்ச்சி பெற்ற நபர்களை நேர்காணல்
5) சாதாரண மக்களுடன் கலந்துரையாடல் நடாத்தல் (கேள்வித்தாள் நிரப்பல்)

## எமது விளைவுகள்:

1) கோவிட்-19 அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் செய்தி அறிவிப்பு நடவடிக்கைகளில் பிரதான பங்களிப்பு செலுத்தும் காரணிகளை இனங்காண கருத்துருவிலான கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.
2) பொதுமக்கள் ஈடுபடும் நிகழ்வுகள் மற்றும் வட்டமேசை கலந்துரையாடல்களை நடாத்துதல்.
3) தற்போது பாவனையிலுள்ள இயற்கை அனர்த்த ஆபத்துக்களைக் குறைக்கும் வழிமுறைகள் பற்றியும் சர்வதேச ரீதியில் பரவும் நோய்களை எதிர்க்கும் வழிமுறைகளை அதனுடன் ஒன்றிணைப்பது பற்றியுமான அறிக்கையொன்றை முன்வைத்தல். இது தொடர்பாகச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இதழ்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல்.
4) எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் பரவும் நோய்களைப் பற்றிய முன்னெச்சரிக்கைகளையும் இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமையுடன் இணைப்பதற்கான கருத்திட்டமொன்றை முன்வைத்தல்.
5) முன்னணி சர்வதேச மாநாடுகளில் இது தொடர்பான வாய்மொழிமூல விளக்கக்காட்சிகளை நடாத்தல்.
6) இக்கருத்திட்ட நடவடிக்கைகளைப் பற்றி தெரிவிக்க இணையத் தளத்தையும், துண்டுப்பிரசுரங்களையும் பயன்படுத்தல்.

## எமது உலகளாவிய மற்றும் தேசிய ரீதியான தடம்

## இக்கருத்திட்டமானது:

- இலங்கையின் பெரும்பாலான இடங்களின் சர்வதேச ரீதியில் பரவும் நோய்களுக்கு எதிரான தயார்நிலையை முன்னேற்ற உதவும்.
- யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையிலான கடல்சார் ஆணையகம் (ஐழுஊ-ருNநுளுஊழு) மற்றும் இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை மற்றும் குறைப்பு மைப்பிற்கான அரசுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழு (ஐஊபு.'.ஐழுவுறுஆளு) ஆகிய அமைப்புகள், சுனாமி அனர்த்தத்திற்கான தயார்நிலை, அனர்த்த ஆபத்துகளை எதிர்க்கும் திறனை முன்னேற்றும் வழிமுறைகள் பற்றி ஆராய்வதற்குப் பங்களிப்பு செலுத்தும்
- கோவிட்-19ஆல் மற்றுமோர் இயற்கை அனர்த்தத்திற்க்கு முகம்கொடுக்கும் தகைமைக்கு ஏற்படும் பாதிப்பு பற்றி தேசிய ரீதியில் இயற்கை அனர்த்த நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகஸ்தர்களுக்கு விளக்கமளிக்க உதவும்
- இதன் மூலமாக சரியான முடிவுகளை எடுக்க முடிவதுடன், 13 காலநிலைச் செயல்பாடு: 11 நிலைத்திருக்கும் நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்: மற்றும் 10 சமத்துவமின்மையைக் குறைத்தல் ஆகிய நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளையும் (ளுனுபு) பூர்த்தி செய்யலாம்.

### Lead

University of HUDDERSFIELD
Inspiring global professionals

University of Huddersfield
UK

### Co-Investigators

University of Colombo
Sri Lanka

University of Moratuwa
Sri Lanka

### Lead Partner

Ministry of Health
Sri Lanka

### Other Partners

DMC SRI LANKA · FSLGA · ADRiMP · adpc · GMCA GREATER MANCHESTER COMBINED AUTHORITY · Public Health England · UNDRR UN Office for Disaster Risk Reduction · United Nations Educational, Scientific and Cultural Organization · Intergovernmental Oceanographic Commission

## Key contacts


- Project Leads:
  **Professor Dilanthi Amaratunga** *(d.amaratunga@hud.ac.uk)* **and**
  **Professor Richard Haigh** *(r.haigh@hud.ac.uk)*
  Global Disaster Resilience Centre,
  School of Applied Sciences,
  University of Huddersfield, UK
- Sri Lanka Health Lead:
  **Dr Hemantha Herath**
  *(hdbher@gmail.com)*
  Ministry of Health, Sri Lanka
- Sri Lanka Academic Lead:
  **Dr Nishara Fernando**
  *(nishara.fernando@gmail.com)*
  University of Colombo, Sri Lanka


*Disclaimer: UK Research and Innovation accepts no liability, financial or otherwise, for expenditure or liability arising from the research funded by the Grant except as set out in these Terms and Conditions, or otherwise agreed in writing*

UK Research and Innovation · EPSRC Engineering and Physical Sciences Research Council · GCRF Global Challenges Research Fund · Newton Fund